**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை:– திருமதி.ரா.பிரேமி, B.A., L.L.B (Hons).,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தேவகோட்டை.**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**இடையீட்டு மனு எண்.02/2025**

**மற்றும்**

**அசல் வழக்கு எண்.92/2025**

**CNR NO: TNSV060000942025**

சுப்பிரமணியன் ...மனுதாரர்

–எதிர்–

1. சாத்தையா
2. ராமு
3. மீனாள்
4. லெட்சுமி
5. சரசு
6. வட்டாட்சியர், தேவகோட்டை,
7. சார்ஆட்சியர், தேவகோட்டை,
8. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை,
9. சார்பதிவாளர், தேவகோட்டை

...எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 09.07.2026ம் தேதி என் முன்னிலையில்

இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சொர்ணலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.பொன்முடி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலினை செய்தும் இதுநாள் வரையும் இந்நீதிமன்றத்தில் பரிசீலினைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

**ஆர்டர் XXXIX, ரூல் 1 மற்றும் 2 சிபிசி செக்சன் 151 கீழ் தாக்கல் செய்யும் மனு**

**1. மனுதாரரின் வழக்குரையின் சுருக்கம்:**

(i). மங்களம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.5/8, 14 செண்டு அளவுள்ள நன்செய் நிலம் தாவா சொத்தாகும். மேற்படி சொத்து முத்து அம்பலம் குடும்பத்தின் பூர்வீகச் சொத்து என்றும், பின்னர் பொதுக்குடும்பச் சொத்துகள் தொடர்பாக நடைபெற்ற வாய்மொழிப் பாகப்பிரிவினையில் தாவா சொத்து சுப்புராமு அம்பலம் குடும்பப் பங்கிற்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார். சுப்புராமு அம்பலம் தனது மகன்களான வெள்ளைச்சாமி, சேது மற்றும் சுப்பிரமணியன் ஆகியோருக்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை செய்தபோது, தாவா சொத்தான சர்வே எண்.5/8 மனுதாரரான சுப்பிரமணியனுக்கு ஒதுக்கப்பட்டதாகவும்,

அதனை ஒட்டியுள்ள சர்வே எண்.5/9 சொத்தும் மனுதாரருக்கு பாகமாகக் கிடைத்ததாகவும் கூறியுள்ளார். இரு சர்வே எண்களுக்கும் இடையிலிருந்த வரப்பை அகற்றி, கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக இரு நிலங்களையும் ஒன்றாகச் சேர்த்து மனுதாரர் வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும், அமைதியாகவும் விவசாயம் செய்து அனுபவித்து வருவதாகவும், இதுவரை எதிர்மனுதாரர்கள் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தனது உரிமை மற்றும் அனுபவத்திற்கு ஆதாரமாக SLR, கணினி 10(1), புலப்படம், பாகப்பிரிவினை ஆவணம், வில்லங்கச் சான்று, வம்சாவழி ஜாபிதா உள்ளிட்ட ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளதாகவும்,

(ii). இந்நிலையில், தாவா சொத்தின் பட்டா காந்திமதி பெயரில் மாற்றப்பட்டு, பின்னர் 04.04.2025 அன்று தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1877/2025 மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், 1ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும், கோட்டாட்சியர் அலுவலகத்திலும் புகார் மற்றும் மனு அளித்து தமக்கு இடையூறு ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். சித்திரவள்ளி மற்றும் பாப்பா ஆகியோரிடமிருந்து 13.10.2025 அன்று விடுதலைப் பத்திரம் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார். எனவே, காந்திமதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்து, தாவா

சொத்தின் பட்டாவை மனுதாரர் பெயருக்கு மாற்றவும், ஆவண எண்.1877/2025 உள்ளிட்ட எதிர்மனுதாரர்களின் ஆவணங்களை ரத்து செய்யவும், அதன் தொடர்ச்சியாக 6 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்தின் பட்டாவை மனுதாரர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய உத்தரவிட கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும், வழக்கு முடியும் வரை 1 முதல் 5ம் எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது ஆட்களோ தாவா சொத்தில் தலையிடக்கூடாது என்றும், தாவா சொத்து தொடர்பாக பட்டா மாற்றம் அல்லது புதிய ஆவணப் பதிவு மேற்கொள்ளக்கூடாது என்றும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கவும், மனுவுடன் ஏக கால நோட்டிசுடன் தற்காலிக எக்ஸ்பார்டியாக உத்தரவிட வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. எதிர்மனுதாரரின் வழக்குரையின் சுருக்கம்:**

(i). மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள வாரிசு விவரங்களும், தாவா சொத்து தொடர்பான உரிமை மற்றும் பாகப்பிரிவினை விவரங்களும் உண்மைக்கு புறம்பானவை என்றும், முத்து என்பவருக்கு பெரியய்யா, வீரப்பன், சுப்புராமு, சுந்தரம் மற்றும் சின்னதங்கச்சி ஆகிய ஐந்து வாரிசுகள் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். சுப்புராமுவின் வாரிசுகளாக வீரமாகாளி, காந்தி, வெள்ளைச்சாமி, சேது மற்றும் சுப்பிரமணியன் ஆகியோரும், ராசுவின் வாரிசுகளாக வெள்ளைச்சாமி, கருப்பையா மற்றும் நாச்சம்மை ஆகியோரும் இருந்ததாகவும் கூறியுள்ளனர். கருப்பையா முத்துக்கண்ணுவை திருமணம் செய்து சில

காலத்திலேயே இறந்ததால், தாவா சொத்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே அவரது மனைவி முத்துக்கண்ணு பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு, அவருக்குப் பாத்தியப்பட்டதாகவும், முத்துக்கண்ணுவுக்கு சித்திரவள்ளி மற்றும் பாப்பா ஆகிய இரு மகள்கள் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். சுப்புராமுவின் வாரிசுகளான வெள்ளைச்சாமி, சேது மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் 35 ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை செய்து, தாவா சொத்து சுப்பிரமணியனுக்கு கிடைத்ததாகவும், சர்வே எண்.5/9 உடன் சேர்த்து அனுபவித்து வருவதாகவும் மனுதாரர் கூறியுள்ள தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் மறுத்துள்ளனர்.

(ii). மேலும், தாவா சொத்து முத்துக்கண்ணு பெயரில் பட்டா ஏற்பட்டு அவருக்குப் பாத்தியப்பட்டிருந்த நிலையில், கருப்பையாவின் தங்கை நாச்சம்மைக்கு வாய்மொழிப் பாகப்பிரிவினை மூலம் கிடைத்து, பின்னர் நாச்சம்மையின் குடும்ப வழியாக காந்திமதிக்கு சீதனமாக வழங்கப்பட்டதாகவும் கூறியுள்ளனர். காந்திமதி தாவா சொத்தை தனது பெயரில் பட்டா மாற்றி நீண்டகாலமாக விவசாயம் செய்து அனுபவித்து வந்ததாகவும், சுப்பையா அம்பலம் 1979 ஆம் ஆண்டு எழுதிய உயில், ஆவண எண்.14/1979 மூலம் குடும்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். காந்திமதி 07.11.2007 அன்று இறந்த பின்னர், அவரது வாரிசுகள் தாவா சொத்தை அனுபவித்து, பின்னர் சட்டப்படி 1–ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து

கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் 1–ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் விவசாயம் செய்து வருவதாகவும் கூறியுள்ளனர். எனவே, தாவா சொத்துக்கும் மனுதாரர் கூறும் பூர்வீக உரிமைக்கும் சம்பந்தமில்லை என்றும், உண்மை நிலையை மறைத்து தவறான வாரிசு விவரங்களைத் தெரிவித்து தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். தாவா சொத்து தொடர்பான உரிமை மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் அனைத்து ஆவணங்களையும் விசாரணையின் போது தாக்கல் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளனர். ஆகையால், மனுதாரரின் வழக்கை 1 முதல் 5ம் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

**3. இப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா, இல்லையா என்பதாகும்?**

(i). மனுதாரர், தாவா சொத்து வாய்மொழிப் பாகப்பிரிவின் மூலம் சர்வே எண் 5/9 உடன் சேர்த்து தனக்கு ஒதுக்கப்பட்டதாகவும், மனுதாரர் தாவா சொத்தையும் அதன் அருகில் உள்ள சர்வே எண் 5/9–ஐயும் ஒருசேர சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயம் செய்து அனுபவித்து வருவதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில், 1–ம் எதிர்மனுதாரர் தனது மாமியாரான காந்திமதி பெயரில் பட்டா மாற்றம் செய்து வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி காந்திமதியின்

வாரிசுகளான 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் சேர்ந்து, வாதியை ஏமாற்றும் பொருட்டு, 1–ம் எதிர்மனுதாரர்க்கு தாவா சொத்தைப் பொறுத்து 04.04.2025 அன்று கிரயப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். ஆனால், தாவா சொத்து உண்மையில் தனக்குப் பாத்தியப்பட்டது என்றும், தனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் வழக்கை நிரூபிக்கும் சுமை மனுதாரர் மீதே உள்ளது. மனுதாரர் தனது தரப்பை நிரூபிப்பதற்காக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார்.

(ii). ம.சா.ஆ.1 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது பட்டா எண் 1700–க்கான 10(1) என்பதும், அதில் தாவா சொத்தான சர்வே எண் 5/8, விஸ்தீரணம் 5.50 ஏர்ஸ், 1–ம் எதிர்மனுதாரரின் பெயரில் தாக்கலாகி இருப்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.2 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது பட்டா எண் 340–க்கான 10(1) என்பதும், அதில் சர்வே எண் 5/9, இம்மனுதாரரான சுப்புராமு அம்பலம் மகன் சுப்பிரமணி பெயரில் தாக்கலாகி இருப்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.3 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது பட்டா எண் 270–க்கான 10(1) என்பதும், அதில் தாவா சொத்தான சர்வே எண் 5/8, சுப்பையா மனைவி காந்திமதி என்பவரது பெயரில் பட்டா தாக்கலாகி இருப்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.4 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது 28.03.2025 தேதியிட்ட கிரயப் பத்திரம் என்பதும், அதை, ராமு, மீனாள் மற்றும் சரசு ஆகியோர் 1–

ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தான சர்வே எண் 5/8 உட்பட சில சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்திருப்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.5 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது தாவா சொத்து தொடர்பாக ஏற்பட்ட 10(1) என்பதும், அது ஏற்கனவே ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

(iii). ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களைப் பொறுத்தவரையில் அவை சர்வே எண் 5/8 மற்றும் 5/9 ஆகியவற்றுக்கான புலப்பட நகல்கள் என்பதும், அவற்றைப் பரிசீலிக்கையில் மேற்படி இரு சொத்துக்களும் அருகருகே அமைந்துள்ளன என்பதும் தெளிவாகிறது. ம.சா.ஆ.8 ஆவணமான தாவா சொத்து சம்பந்தமான வில்லங்கச் சான்றிதழைப் பரிசீலிக்கையில், 01.01.1975 முதல் 08.04.2025 வரை தாவா சொத்து சம்பந்தமாக 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்த கிரய ஆவணம் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.9 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், அது 13.10.2025 தேதியிட்ட விடுதலைப் பத்திரம் என்பதும், அதை சித்ரவள்ளி மற்றும் பாப்பா ஆகியோர் சேர்ந்து மனுதாரான சுப்பிரமணியத்திற்கு அவரது பாகத்தைப் பொறுத்து எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் என்பதும் தெளிவாகிறது.

(iv). மேற்கூறிய ஆவணங்களைப் பரிசீலிக்கையில், தாவா சொத்துக்கு முதலில் சுப்பையா மனைவி காந்திமதி என்பவரது பெயரில்

பட்டா ஏற்படுத்தப்பட்டதும், பின்னர் அவரது வாரிசுகள் 1–ம் எதிர்மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுத்ததன் காரணமாக, தாவா சொத்துக்கான பட்டா 1–ம் எதிர்மனுதாரரின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதும் தெளிவாகிறது. மனுதாரர், தாவா சொத்து தனக்கு வாய்மொழிப் பாகப்பிரிவின் மூலம் ஒதுக்கப்பட்டதாகவும், அது சம்பந்தமாக பாகப்பிரிவினை நோட்டு எழுதப்பட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால், அது சம்பந்தமான ஆவணங்களையோ, மேற்படி பாகப்பிரிவினை நோட்டையோ மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும், தாவா சொத்து அவர்களது முன்னோர்களின் பெயரில் கூட்டுப் பட்டாவாக இருந்ததாகவும், அதில் தாவா சொத்து கருப்பையா என்பவரது மனைவியான முத்துக்கண்ணு என்பவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் கூறியுள்ளார். ஆனால், அது சம்பந்தமான பட்டா மற்றும் நில அளவைப் பதிவேடு போன்ற ஆவணங்களையும் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(v). மேலும், ம.சா.ஆ.4 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் வாரிசு அடிப்படையில் பெற்ற சொத்துக்களை 1–ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துள்ளதும், அதனைத் தொடர்ந்து தாவா சொத்துக்களுக்கு 1–ம் எதிர்மனுதாரரின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதும் தெளிவாகிறது. எனவே, மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்கத் தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா சொத்து

தனது முன்னோர்களுக்குப் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களையோ, பாகப்பிரிவின் மூலம் தனது பாகத்திற்கு அது ஒதுக்கப்பட்டது என்பதையோ நிரூபிக்க மனுதாரர் தவறியுள்ளார். எனவே, மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தைப் பெறுவதற்கான முதல் நிலை வழக்கு தன்பக்கம் இருப்பதை மனுதாரர் நிரூபிக்கத் தவறியதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், தாவா சொத்துக்கான கிரைய ஆவணங்களும் பட்டாவும் 1–ம் எதிர்மனுதாரரின் பெயரில் இருப்பதால், வழக்கின் சமநிலையும் மனுதாரரின் பக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு மற்றும் கஷ்டம் ஏற்படும் என்பதை மனுதாரர் நிரூபிக்க தவறிவிட்டார். மேலும், தாவா சொத்து யாருக்குப் பாத்தியப்பட்டது என்பதையும், அது பாகப்பிரிவினை செய்யப்பட்டதா இல்லையா என்பதையும் அசல் வழக்கில் இருதரப்பினரின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை முழுமையாகப் பரிசீலித்த பின்னரே முடிவு செய்ய இயலும். அதனை இவ்விடைக்கால மனுவில் தீர்மானிக்க இயலாது. எனவே, இடைக்காலத் தடை உத்தரவு கட்டளை பரிகாரம் வழங்குவதற்கான தேவையான சாராம்சங்களை மனுதாரர் நிரூபிக்கத் தவறியுள்ளதால், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்குக் கிடைக்கத்தக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**4. தீர்ப்பு**

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை**

**இல்லை.**

இத்தீர்ப்பு எனது உத்தரவின்படி கூறப்பட்டு, சுருக்கெழுத்துச் தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, எனது திருத்தத்திற்குப் பிறகு, 2026 ஆகஸ்ட் மாதம் 18–ஆம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் நான் அறிவித்தேன்.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2026.08.18 15:53:21 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**

**<u>இணைப்பு ஆவணங்கள்:</u>**

**மனுதாரர் தரப்பின் சாட்சிகள் பட்டியல்** – எதுவுமில்லை –

**மனுதாரர் தரப்பின் ஆவணங்கள் பட்டியல்**

1. சர்வே எண் 5/8 உள்ள சொத்துக்குரிய கணினி 10(1) – நகல் – ம.சா.ஆ.1 ஆகவும்,

2. சர்வே எண் 5/9 க்குரிய கணினி 10(1) – நகல் – ம.சா.ஆ.2 ஆகவும்,

3. 1–ம் பிரதிவாதியின் மாமியார் பெயரில் உள்ள கணினி 10(1)– நகல் – ம.சா.ஆ.3 ஆகவும்,

4. ராமு, மீனாள், லெட்சுமி, சரசு ஆகியோர்கள் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் – நகல் – ம.சா.ஆ.4 ஆகவும்,

5. 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி 10(1) – நகல் – ம.சா.ஆ.5 ஆகவும்,

6. தாவா சொத்தின் புலப்படம் – நகல் – ம.சா.ஆ.6 ஆகவும்,

7. தாவா இடத்தின் அருகில் உள்ள சர்வே எண் 5/9 க்கான புலப்படம் – நகல் – ம.சா.ஆ.7 ஆகவும்,

8. வில்லங்கச் சான்றிதழ் – ம.சா.ஆ.8 ஆகவும்,

9. விடுதலைப் பத்திரம் – ம.சா.ஆ.9 ஆகவும்,

10.வாதியின் வம்சாவளி ஜாபிதா – ம.சா.ஆ.10 ஆகவும்,

11. அரசு வழிகாட்டியின் மதிப்பு – கணினி நகல் – ம.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பின் சாட்சிகள் பட்டியல் – எதுவுமில்லை –**

**எதிர்மனுதாரர்கள் தரப்பின் ஆவணங்கள் பட்டியல் – எதுவுமில்லை –**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.08.18 15:53:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

தேவகோட்டை

இடையீட்டு மனு எண்.02/2025

மற்றும்

அசல் வழக்கு எண்.92/2025

நாள்: 18.08.2026

-------------------------

சீரான/வரைவு தீர்ப்புரை

-------------------------